**ஒதுக்கீட்டு தலைப்பு - 264**

**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**

**யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் செயற்படும் பிரதேச செயலகங்களின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1.0 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்

(i) மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வழிநடத்தல். மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் செயலாற்றலை முன்னேற்றுதல்.

(ii) கிராம மற்றும் பிரதேச மட்டங்களில் அலுவலகங்கள் மற்றும் அமைப்புகள் ஊடாக சட்டப்படி கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றல் வருமானத்தை சேகரிப்பதற்கு வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் முகவராகச் செயற்படுதல். பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கல். அதன் நடவடிக்கைகளில் மாகாண சபைகளிற்கு உதவிபுரிதல். உள்ளூராட்சி மட்டத்தில் ஆளுமையின் தரத்தை மேம்படுத்துவதற்காக மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளில் மனித வளங்களின் அபிவிருத்தியும் முன்னேற்றமும்.

(iii) தேசிய கொள்கை வடிவமைப்பிற்குள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அரசாங்கம் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல். தேவையான வழிகாட்டல் மற்றும் மேற்பார்வைகளை வழங்குவதனூடாக மகாணசபைகள் மூலம் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் அமுலாக்கலை உறுதிப்படுத்தல்.

(iv) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு உதவிபுரிதல்.

## 4.0 கணக்குகள்

### 4.1 மொத்த நிதிஏற்பாடும் செலவினமும்

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் செயற்படுகின்ற 11 பிரதேச செயலகங்கள் மற்றும் நான்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் என்பவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு ரூபா 373,011,417 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 372,432,879 பயன்படுத்தப்பட்டிருந்தது. எனவே மாவட்ட செயலகம் பிரதேச செயலகங்கள் மற்றும் 04 உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் என்பவற்றின் தேறிய சேமிப்பு ரூபா 578,538 அல்லது 01 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவின வகுதி | மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாடு | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவரும் | 297,925,000 | 302,925,000 | 302,407,537 | 517,463 | 0.17 |
| மூலதனம் | 60,200,000 | 70,086,417 | 70,025,342 | 61,075 | 0.09 |
| மொத்தம் | 358,125,000 | 373,011,417 | 372,432,879 | 578,538 | 0.16 |

### 4.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு நோக்கங்களுக்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் கீழே காட்டப்பட்டவாறு ரூபா 3,917,884,336 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறான ஏற்பாட்டின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| தலைப்பு இலக்கம் | நிதி ஏற்பாடுகளை வழங்கிய அமைச்சு/ திணைக்களம் | நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவு | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு/ மிகை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| 017 | தேர்தல்கள் திணைக்களம் | 60,701,350 | 55,039,434 | 5,661,916 |

| | | | | |
|---|---|---|---|---|
| 103 | பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சு | 221,490 | 217,413 | 4,077 |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 415,107,570 | 261,648,730 | 153,458,840 |
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 15,869,047 | 9,550,704 | 6,318,343 |
| 110 | நீதி அமைச்சு | 1,242,785 | 1,008,707 | 234,078 |
| 118 | விவசாய அமைச்சு | 40,000 | 34,900 | 5,100 |
| 120 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் மேம்பாட்டு அமைச்சு | 46,815,125 | 45,460,966 | 1,354,159 |
| 121 | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 4,833,469 | 4,709,998 | 123,471 |
| 124 | சமுக சேவைகள் அமைச்சு | 14,875,067 | 14,725,806 | 149,261 |
| 127 | தொழிலுறவு மற்றும் விளைதிறன் மேம்பாட்டு அமைச்சு | 104,228 | 83,058 | 21,170 |
| 128 | மரபுரீதியான கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சிகள் அமைச்சு | 1,035,300 | 790,729 | 244,571 |
| 133 | தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 12,435,855 | 8,352,201 | 4,083,654 |
| 134 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 372,500 | 370,505 | 1,995 |
| 139 | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 12,902,675 | 10,652,486 | 2,250,189 |
| 140 | கால்நடை கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 500,000 | 297,822 | 202,178 |
| 142 | தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு | 1,000,000 | 996,006 | 3,994 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொரு தலைப்பின் கீழ் உள்ளபடியான செலவினமாக குறிப்பிடப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட தொகைகள் மாவட்ட செயலகத்தால் பிரதேச செயலகங்களிற்கு விடுவிக்கப்பட்ட தொகையையும் உள்ளடக்கியுள்ளது.

(ii) ஒதுக்கீடானது குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தின் முன் அங்கீகாரமில்லாமல் விஞ்சியிருந்தது.

**(i) சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அளவீட்டு அறிக்கையில்லாமல் சமுர்த்தி நலனாளிகள் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சில நலனாளிகள் இறந்துவிட்ட போதிலும் உரிய குடும்பங்களிற்கு கட்டாய சேமிப்புகள் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது பிரதேச செயலகங்களிலுள்ள பயன்படுத்தப்பட்ட சமுர்த்தி முத்திரைகளின் மீது கணிப்பீட்டுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**(ii) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்**

மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினங்களிற்காக ரூபா 437,211 தொகை ஏற்பட்டிருந்தது, பெறப்பட்ட 14,440 சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்களில் பின்வரும் காரணங்களினால் காரணமாக மீளாய்வாண்டின் போது 5,646 தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**4.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4.5 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்களையும் 4.6 இலிருந்து 4.16 வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட்ட ஏனைய பிரதான கணக்காய்வு காண்புகளையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

(iv) பொது வைப்புக் கணக்கின் காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

(v) செயற்திட்ட நிதிகள் ரூபா 5,400,00

2008 ஆம் ஆண்டில் செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 5,400,000 ஆன வெளிநாட்டு உதவி மானியம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் உரிய நோக்கங்களிற்கு செலவிடப்படாமல் இறுதியாக வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆதலால், மாவட்டச் செயலகம் பொது மக்களின் தேவைகளிற்கு கவனம் செலுத்தியிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்களின் கணக்கிணக்கக் கூற்று**

(i) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 26401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 77,227,119 மொத்தமாக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளின் அறவீடு தொடர்பான பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) 1996 ஆம் ஆண்டிலிருந்து இருக்கின்ற ரூபா 86,246 தொகையான வித்தியாசங்களை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கடன் அறவீட்டுப் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. இதன்விளைவாக, திறைசேரி அங்கீகாரத்துடன் நிலுவையாக இருக்கின்ற கடன் மீதிகளிலிருந்து ரூபா 657,292 ஆன தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு குறித்த சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாததாக அல்லது குறைவாகப் பயன்படுத்திக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்தின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் | மாவட்ட செயலகம்/ பிரதேச செயலகம் |
|---|---|---|---|---|
| (i) | மோட்டார் வாகனம் | 08 | 2 முதல் 12 ஆண்டுகளிற்கு மேல் | 3 பிரதேச செயலகங்கள் மற்றும் 2 உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் |
| (ii) | ஏனைய சொத்துக்கள் | 2,380 | 5 முதல் 10 ஆண்டுகளிற்கு மேல் | மாவட்டச் செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்கள் |

### (ஆ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள்

பயன்படுத்தப்படாததாக அல்லது குறைவாகப் பயன்படுத்திக் காணப்பட்ட சி மோட்டார் வாகனங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| நிறுவனம் | மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை | மோட்டார் வாகன வகை | எண்ணிக்கை |
|---|---|---|---|
| உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்-நெடுந்தீவு | குறிப்பிடப்படவில்லை | மோட்டார் ஜீப் | 01 |
| | | இருசக்கர உழவு இயந்திரம் | 01 |
| | | மோட்டார் சைக்கிள் | 01 |

| | | | |
|---|---|---|---|
| | (இ) நி.பி 756 மற்றும் 1647 (ஆ) | - | மோட்டார் வாகனங்களின் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ள வேண்டிய போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக அத்தகைய மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் |
| ii | அரச நிதிச் சுற்றறிக்கைகள் | | |
| | (அ) 2004 ஆகஸ்ட் 31 இன் 353(5) ஆம் இலக்கம் | பெறுமதி கிடைக்க வில்லை | எட்டு மோட்டார வாகனங்கள், 73 கணனி உதிரிப்பாகங்கள், 6 மின்பிறப்பாக்கிகள், 1 நிர் இறைக்கும் இயந்திரம், 2 குளிரூட்டல் சாதனம், 1 நிழற்பட பிரதி இயந்திரம் மற்றும் 2,297 கருவிகள் மற்றும் உபகரணங்கள் 1997 முதல் 2010 ஆம் ஆண்டுவரை பயன்படுத்தப்படாமல் இருந்தது. |
| | (ஆ) 2009 நவம்பர் 13 இன் 438 ஆம் இலக்கம் | 278,975 | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக மாவட்டச் செயலகத்தால் அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்கள் ஏலத்திற்கு விடப்பட்டிருந்தது. |
| iii | 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 1,828,152 | சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு அரசாங்க அங்கீகாரம் பெற்ற இயந்திரப் பொறியியலாளர் ஒருவரிடமிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமல் 17 மோட்டார வாகனங்களின் திருத்தங்களிற்காக ரூபா 1,828,152 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

**4.12. ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 28 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி ஆண்டுத் தொடக்கத்தில் 2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கேள்வி ஆவணங்கள் மற்றும் கேள்விதார்களின் முன் தகைமைகள் தொடர்பான ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கேள்வி திறத்தல் குழு, கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு என்பவற்றின் கூட்டக் குறிப்புகள் கொள்வனவு வழிகாட்டலின் 2.11.3 ஆம் பிரிவின்படி குறித்த படிவத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொள்வனவு வழிகாட்டலின் 5.3.20(9) ஆம் பிரிவின்படி மாவட்டச் செயலாளரினால் கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொள்வனவு வழிகாட்டலின் 5.4.10 ஆம் பிரிவின்படி மாவட்டச் செயலாளரினால் ரூபா 4,767,730 பெறுமதியான ஆறு கொள்வனவுகளிற்காக வழங்குநர்களிடமிருந்து செயலாற்றல் பிணை முறிகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கொள்வனவு வழிகாட்டலின் 8.12.3 ஆம் பிரிவின்படி களஞ்சியத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ரூபா 4,967,650 பெறுமதியான கொள்வனவிற்காக வழங்குநர்களால் வழங்கப்பட்ட பொருட்களிற்காக சான்றிதழை வழங்கியிருக்கவில்லை.

**4.13 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் செயற்பாட்டுத் திறமையீனங்கள் அவதானிக்கப்பட்டன.

| நிறுவனம் | வாகன இலக்கம் | ஒரு லீற்றரிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள் நுகர்வு | உள்ளபடியான எரிபொருள் நுகர்வு | முரண் |
|---|---|---|---|---|
| பிரதேச செயலகம் | | | | |
| - வலிகாமம் தென்மேற்கு | டபிள்யூபிபிஏ 3870 | 10 | 8 1/2 | 1 1/2 |
| - நல்லூர் | டபிள்யூபிபிஏ 3651 | 10 | 9 | 1 |
| - வடமராச்சி தென்மேற்கு | டபிள்யூபிபிஏ 6998 | 10 | 7 | 3 |
| - ஊற்காவற்துறை | டபிள்யூபிபிஏ 3864 | 10 | 10 | - |
| - யாழ்ப்பாணம் | டபிள்யூபிபிஏ 7009 | 10 | 9 | 1 |
| - வலிகாமம் வடக்கு | டபிள்யூபிபிஏ 7003 | 10 | 8 1/2 | 1 1/2 |

## 4.15 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

சகல பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தின் நடவடிக்கைகளை மேவுவதற்கு பதவியினர் எண்ணிக்கையும் உள்ளகக் கணக்காய்வின் அறிவும் போதியதாக இருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

### (ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழவினை அமுல்படுத்துதல்

2000 யூன் 12 ஆந்திகதிய ஐஏஐ/2000/I ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின்படி, ஆண்டில் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டம் நடைபெற வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கூட்டம் மாத்திரமே நடைபெற்றது.

## 4.16 மனிதவளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும் - பிரதேச செயலகம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 56 | 35 | 21 |
| மூன்றாம் மட்டம் | 87 | 28 | 59 |
| இரண்டாம் மட்டம் | 1,032 | 665 | 367 |
| ஆரம்ப மட்டம் | 238 | 113 | 125 |
| மொத்தம் | 1,413 | 841 | 572 |